# அதிசய வார நடவடிக்கை

# பாலர் பள்ளி முதலாம் ஆண்டு

# ‘லட்டு’



**கண்ணோட்டம்:**

அதிசய வாரம் என்பது பிள்ளைகள் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் தாமே தேர்ந்தெடுத்த ஒரு தலைப்பையொட்டி ஆழமாக அறிந்துகொள்ளும் ஒரு திட்டப்பணியாகும். அதிசய வாரத்தின்போது நடத்தப்படும் நடவடிக்கைகள் பிள்ளைகள் தங்களுக்கு எழும் வினாக்களுக்கு விடை கண்டறியவும், தெரிவுகளைச் செய்யவும், சுயமாக முடிவுகளை எடுக்கவும் வாய்ப்பு அளிக்கின்றன.

இந்நடவடிக்கை, பிள்ளைகள் இந்திய உணவு வகைகள், அவற்றைச் செய்யும் முறை, சுவை போன்ற தகவல்களை ஆராய்ந்து அறிந்துகொள்ள உதவுகிறது.

**<u>கற்றல் குறிக்கோள்கள்:</u>**

**<u>கற்றல் குறிக்கோள் 1: தாய்மொழி கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்</u>**

1. **தாய்மொழி நடவடிக்கைகளில் விரும்புதல்**
   - புத்தகங்களில் ஆர்வம் காட்டுதல் (எ-டு: புத்தகத்திலுள்ள படங்களைச் சுட்டிக்காட்டிப் பார்த்தல், கதையைப்பற்றிக் கருத்துக் கூறுதல் அல்லது கேள்விகள் கேட்டல்)
   - தாய்மொழியில் நடத்தப்பட்ட கற்றல் அனுபவங்களைப்பற்றிப் பேசுதல்
   - எண்ணங்களையும் தகவல்களையும் தாய்மொழியில் வெளிப்படுத்த அடையாளம் அல்லது குறியீடுகள் வரைதல், உருவாக்குதல்

**<u>கற்றல் குறிக்கோள் 2: அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்</u>**

- பேசும்போது எதிரில் இருப்பவரோடு கண் தொடர்புகொள்ளுதல்
- ஒன்று அல்லது இரண்டு படிநிலைகளைக்கொண்ட கட்டளைகளைக் கேட்டுச் செயற்படுதல்

**இந்நடவடிக்கையில் ஈடுபடும்போது பிள்ளைகள்,**

- சக மாணவர்களின் ஒத்துழைப்பையும் ஆசிரியரின் ஆலோசனையையும் பெறுகிறார்கள்.
- சுயமுனைப்பு, ஆராய்தல், பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் ஆகியவற்றின்வழி மகிழ்ச்சியான சுய கற்றல் அனுபவத்தைப் பெறுகிறார்கள்.
- தங்களின் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்கிறார்கள்.

# 1. நான் தெரிந்துகொள்ள விரும்புவது...

1.1 ஆசிரியர் பிள்ளைகளுடன் இந்திய உணவு வகைகளைப்பற்றிக் கலந்துரையாடினார். பிறகு, பிள்ளைகள் அவர்களுக்குப் பிடித்த உணவை வரைந்தார்கள்.



1.2 பிள்ளைகள் வாக்கெடுப்பின் வாயிலாக அதிசய வாரத் திட்டப்பணிக்கு ‘லட்டு’ என்னும் புத்தகத்தைத் தேர்ந்தெடுத்தார்கள்.








கதையில் வரும் இந்திய உணவுகளைப்பற்றிப் பிள்ளைகள் கலந்துரையாடுதல்





ஆசிரியர் பெரிய புத்தகத்தில் உள்ள கதையைப்பற்றிப் பிள்ளைகளோடு கலந்துரையாடுதல்

1.3 பிள்ளைகள் பின்வரும் வினாக்களை எழுப்பி அதற்கான விடைகளைக்  கண்டறிய விரும்பினார்கள்.

- எப்படி லட்டு செய்வது?
- லட்டில் எத்தனை வகைகள் உள்ளன?
- லட்டை வேறு எந்தெந்த நிறங்களில் செய்யலாம்?

**சிந்தனை வரைபடத்தில் பதிவு செய்தல்**

1.4 ஆசிரியர் லட்டைப்பற்றிப் பிள்ளைகளுடன் கலந்துரையாடினார். பிறகு,  ஆசிரியர் பிள்ளைகள் ஏற்கனவே அறிந்து வைத்திருக்கும் தகவல்களைச் சிந்தனை வரைபடத்தில் பதிவு செய்தார்.




**பிள்ளைகள் கூறிய கருத்துகளை ஆசிரியர் சிந்தனை வரைபடத்தில் பதிவு செய்தல்**

1.5  பிள்ளைகளை வண்ணக் களிமண்ணால் செயற்கைலட்டைச் செய்து பார்த்தனர்.





**மாணவர்கள் வண்ணக் களிமண்ணால் லட்டுகளைச் செய்து பார்த்தல்**

# 2. நான் கண்டுபிடித்தவை...

2.1 பெற்றோர் ஒருவர் வகுப்புக்கு வந்தார். அவர் லட்டைப்பற்றிய தகவல்களைச் சொன்னதோடு பிள்ளைகளுக்கு லட்டைச் செய்தும் காட்டினார்.



**பெற்றோர் லட்டு வகைகளைப்பற்றிப் பிள்ளைகளிடம் விளக்குதல்.**





**பெற்றோர் பிள்ளைகளிடம் லட்டு செய்து காட்டுதல்**

2.2 பிள்ளைகள் லட்டைப்பற்றி அறிய விரும்பிய தகவல்களைப் பெற்றோரிடம் கேட்டறிந்து கொண்டனர்.

- ரவா லட்டு எப்படி செய்வதென்று பிள்ளைகள் அறிந்துகொண்டனர்
- பூந்தி லட்டு, ரவா லட்டு, தேங்காய் லட்டு, பாதாம் லட்டு ஆகிய லட்டு வகைகளின் பெயர்களை அறிந்துகொண்டனர்.
- ஊதா, மஞ்சள், நீலம், பச்சை, சிவப்பு போன்ற வண்ணங்களிலும் லட்டு செய்யலாம் என்று அறிந்துகொண்டனர்.

# 3. நான் தெரிந்துகொண்டவை…

3.1 பிள்ளைகள் பூந்தியை உருண்டையாகப் பிடித்துப் பார்த்து மகிழ்ந்தார்கள்.













**************************************************